# எலஹெர பிரதேச சபை
# பொலன்னறுவை மாவட்டம்

-----------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

-------------------------------

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூலை 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஒக்தோபர் 22 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

---------------------

தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள எலஹெர பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 225,100 தொகை கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தொங்கல் கணக்கிலுள்ள ரூபா 276,543 தொகையான செலவு மீதி இனங்காணப்படாமல் திரண்ட நிதியத்தில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

#### (அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 05 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐய வினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்களின் கணிப்பீடு செய்யக்கூடிய பெறுமதி ரூபா 27,426,897 ஆகும்.

#### (ஆ) கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 30,986,562 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,640,819 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 610,737 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 628 | 1,315 | 808 |
| (ii) | வாடகை | 1,564 | 1,839 | 758 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 90 | 90 | 48 |
| (iv) | ஏனைய வருமானம் | 6,196 | 10,303 | 2,162 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 2,657,889 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 576,450 |

### 2.3 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டதன் பிரகாரம் சில சொத்தக்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டது.

| | சொத்து விபரம் | பெறுமதி | செயற்பாடற்ற திகதி | செயற்படாதிருந்த கால எல்லை |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| (i) | அரிசி மா தயாரிக்கும் உற்பத்தி இயந்திரம் | 613,500 | 2008.04.17 | 04 வருடங்கள் |
| (ii) | அரிசி மா உற்பத்தி கட்டிடம் | 493,675 | 2008.04.17 | 04 வருடங்கள் |
| (iii) | நீர் பவுசர் | 50,000 | 2011 ஆம் ஆண்டு | 01 வருடம் |
| (iv) | இராணுவத்தால் மீளக் கையளிக்கப்பட்ட டபள்கப் வாகனம் | கணிப்பீடு செய்யப்பட வில்லை | 2009.10.16 | 02 வருடங்கள் |

## 2.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

சபைக்குக் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள், எதிர்வரும் வருடங்களில் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட முறைகளைக் காண்பிக்கின்ற கூட்டிணைந்த திட்டம் மற்றும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டில் நிறுவனத்தில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்